இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 299 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 26 – திங்கள்கிழமை 09 ஜூன் 2025 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 299 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 26 - Monday 09 June 2025 - Trichy ★★ 8 Pages ₹ 5.00

## ‘ஓரணியில் தமிழ்நாடு’ கழக புதிய உறுப்பினர் சேர்ப்புத் திட்டம்! காணொலியில் முதல்வர் –

# தலைவர் மு.க.ஸ்டாலின் - மாவட்டச் செயலாளர்களுடன் ஆலோசனை!

## எம்.பி. – எம்.எல்.ஏ.க்கள் – தொகுதிப் பார்வையாளர்கள் பங்கேற்பு!

**சென்னை, ஜூன் 9 -**

**“மண் - மொழி - மானம் காத்திட ‘ஓரணியில் தமிழ்நாடு’ கழக புதிய உறுப்பினர் சேர்ப்புத் திட்டம்” என, அண்மையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட சிறப்புத் தீர்மானத்திற்கொப்ப, மாவட்டச் செயலாளர்களும், சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்களும், கழகத்தின் பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகளும், முன்னோடிகளும் கழக புதிய உறுப்பினர் சேர்ப்பில் தீவிரமாக ஈடுபட வேண்டும் என, நேற்று முன்தினம் - காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்ற கூட்டத்தில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கழகத்தினருக்கு அறிவுரை வழங்கினார்.**

அதன் விவரம் வருமாறு:-

கடந்த ஜூன் 1 அன்று மதுரையில் கழகப் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றதறிவோம்!

**கழகப் பொதுக்குழுவில் சிறப்புத் தீர்மானம்!**

அக்கூட்டத்தில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “மண் - மொழி – மானம் காத்திட ‘ஓரணியில் தமிழ்நாடு’ கழக புதிய உறுப்பினர் சேர்ப்புத் திட்டம்” எனும் சிறப்புத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தார்.

அத்தீர்மானம் வருமாறு:-

‘எல்லாருக்கும் எல்லாம்’ எனும் திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்கள் அனைத்தும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருவதால், ஒவ்வொரு வீட்டிலும் ஒருவராவது ஏதேனும் ஒரு திட்டத்தில் பயனாளியாக உள்ளனர். இத்தகைய நலத்திட்டங்களும், மாநிலத்தின் வளர்ச்சி யும், தொடர்ந்திடவும், மாநில உரிமைக்கான போராட்டங்களை உறுதியுடன் முன்னெடுக்க வும், நமது மண், மொழி, மானம் காத்திடவும் தமிழ்நாட்டின் அனைத்துக் குடும்பங்களும் ஒரு குடையின் கீழ் ஒன்றாய் இணைத்து, வருகின்ற சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாக உள்ளது.

துளியும் சமரசமின்றி நெஞ்சுரத்தோடு தமிழ்நாட்டின் உரிமைகளைக் காத்திடும் பொருட்டு “ஓரணியில் தமிழ்நாடு” என உறுப்பினர் சேர்க்கையை கழகம் முன்னெடுக்க வேண்டும் என இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

கழகத்தின் சார்பில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள பூத் கமிட்டிகள் மூலம் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் குறைந்தபட்சம் 30 சதவீத வாக்காளர்களை கழகத்தின் உறுப்பினராக இணைத்திட இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது.

வீடு வீடாகச் சென்று அரசின் திட்டங்களையும், உரிமைப் போராட்டங்களையும் எடுத்துக் கூறி, தமிழ்நாட்டின் வாக்காளர்களை ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற முன்னெடுப்பில் இணைப்பதற்கான செயல்களை மேற்கொண்டு, அடுத்து வரும் இரண்டு மாதங்களில் மாவட்ட - பகுதி - நகர - ஒன்றிய - பேரூர் – வட்ட – கிளைக் கழகச் செயலாளர்கள் தங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கினை நிறைவு செய்திட வேண்டும்.

அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் தொடங்கி, பாக முகவர்கள் வரை கழகத்தின் அனைத்து உடன்பிறப்புகளும் இதில் முழுமூச்சாக உழைத்திட வேண்டும்.

புதிய உறுப்பினர் சேர்க்கைப் பணியை தொகுதிப் பார்வையாளர்களும், மாவட்டச் செயலாளர்களும் முழுமையாகக் கண்காணித்து வெற்றிகரமாக்கிட வேண்டும் என இப்பொதுக் குழு தீர்மானிக்கிறது.

- இவ்வாறு கழகத் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்ட சிறப்புத் தீர்மானம் பொதுக்குழு உறுப்பினர்கள் எழுப்பிய பலத்த கரவொலி மூலம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**பொதுச் செயலாளர் அறிவிப்பு!**

இந்நிலையில் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள், “தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் – நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் – தொகுதிப் பார்வையாளர்கள் கூட்டம்” காணொலிக் காட்சி வாயிலாக, கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் 7.6.2025 – சனிக்கிழமை அன்று (அதாவது நேற்று முன்தினம்) நடைபெறும் என அறிவித்திருந்தார்.

பொதுச் செயலாளரின் அறிவிப்புக் கொப்ப, நேற்று முன்தினம், கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் காணொலி மூலம் நடைபெற்றது.

**கழக உறுப்பினர்கள் சேர்க்கை!**

**விரைந்து செயல்படுத்த அறிவுரை!**

இந்தக் கூட்டத்தில், தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதிப் பார்வையாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மதுரையில் நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட புதிய உறுப்பினர் சேர்க்கைத் திட்டத்தை விரைந்து செயல்படுத்துவது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை மேற்கொண்டார்.

அப்போது உறுப்பினர் சேர்க்கையை விரைவுபடுத்த வேண்டும் என்று கழக நிர்வாகிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (7.6.2025) முகாம் அலுவலகத்தில், தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொகுதிப் பார்வையாளர்கள் கூட்டம் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, கழக துணை பொதுச் செயலாளர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், கனிமொழி கருணாநிதி, மாவட்டச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொகுதிப் பார்வையாளர்கள் கலந்து கொண்டனர்.

## ஒவ்வொரு நகர்வும் வெற்றி பெற

# தலைமைத் தொண்டனாக வாழ்த்துகிறேன்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்!

சென்னை, ஜூன் 9 -

காணொலிக் காட்சி வாயிலாக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நிறைவுற்றதும் முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட வலைதளப் பதிவு வருமாறு:-

**தமிழ்நாட்டின் உரிமைகள் காக்கப்படவும் - நமது #DravidianModel அரசின் திட்டங்கள் தொடர்ந்து மக்களுக்குச் சென்று சேரவும், மக்களை #ஓரணியில்_தமிழ்நாடு என @arivalayam-இல் இணைத்திட, சொல்லாற்றல் - செயலாற்றல் மிக்க செயல்வீரர்களான மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதிப் பொறுப்பாளர்கள் பங்கேற்க மூன்று மணி நேரத்திற்கும் மேலாக ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளுடன் நடந்தேறியது இன்றைய மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!**

**#களம்2026 தேர்தல் பரப்புரையை இப்போதே தொடங்கும் விதமாக மக்களைச் சந்திக்கப் புறப்படும் கழகத் தோழர்களின் ஒவ்வொரு நகர்வும் வெற்றி பெறத் தலைமைத் தொண்டனாக வாழ்த்துகிறேன்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



---

## பீகார் சட்டமன்றத் தேர்தல்:

# தில்லுமுல்லுகளை அரங்கேற்ற பா.ஜ.க. திட்டம்!

## எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஜூன் 9 -

மகாராஷ்டிரா சட்டப்பேரவைத் தேர்தலை போன்று, பீகார் தேர்தலிலும் தில்லுமுல்லுகளை அரங்கேற்ற பா.ஜ.க. திட்டமிட்டுள்ளதாக, எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி அவர்கள் தெரிவித்துள்ளார்.

மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல்காந்தி அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், 2024ல் நடைபெற்ற மகாராஷ்ட்ரா சட்டமன்றத் தேர்தலில் ஜனநாயகத்தை மோசடி செய்து பா.ஜ.க. வெற்றி பெற்றதை சுட்டிக்காட்டியுள்ளார். அதன்படி, தேர்தல் ஆணையத்தை நியமிப்பதற்கான குழுவைத் திரட்டுதல், போலி வாக்காளர்களை பட்டியலில் சேர்த்தல், வாக்காளர் வாக்குப்பதிவை உயர்த்துதல், பா.ஜ.க. வெற்றிபெற வேண்டிய பகுதிகளில் போலி வாக்காளர்களைச் சேர்த்தல் அதன்பிறகு அதற்கான ஆதாரங்களை மறைத்தல் போன்றவற்றை குறிப்பிட்டுள்ளார்.



மேட்ச் பிக்சிங் மூலம் ஏமாற்றுபவர்கள் விளையாட்டுகளை வெல்லலாம். ஆனால், தேர்தல் ஆணையத்தின் நம்பத்தன்மையை சீர்குலைத்து தேர்தலில் வெற்றி பெறுவது பொதுமக்களின் நம்பிக்கையை அழிக்கும் செயல் என்று ராகுல்காந்தி விமர்சித்துள்ளார்.

இதுபோன்ற ஆதாரங்களுடன் வெளியாகும் நடவடிக்கைகளை பார்த்து பொதுமக்கள் எதிர்வரும் காலங்களில் தீர்ப்பு வழங்கவேண்டும் என்று கூறியுள்ளார்.

எனவே, மகாராஷ்ட்ரா சட்டப்பேரவைத் தேர்தலைபோன்று, பீகார் தேர்தலிலும் தில்லு முல்லுகளை அரங்கேற்ற பா.ஜ.க. திட்டமிட்டுள்ளதாகவும், மேட்ச் பிக்சிங் தேர்தல்கள் எந்த ஒரு ஜனநாயகத்திற்கும் ஒரு விஷம்போன்றது என்றும் எதிர்க்கட்சித்தலைவர் ராகுல்காந்தி அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

## தமிழகத்தில் மழை!

சென்னை, ஜூன் 9 –

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:–

தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

09.06.2025: தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய (மணிக்கு 30 முதல் 40 கிலோ மீட்டர் வேகத்தில்) லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

10.06.2025: தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய (மணிக்கு 30 முதல் 40 கிலோ மீட்டர் வேகத்தில்) லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கடலூர், கள்ளக்குறிச்சி மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுவையிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

---

## ஜெர்மனியின் ‘ஃபெஸ்டோ’ நிறுவனம்

# ஓசூரில் ரூ.500 கோடியில் புதிய தொழிற்சாலை!

## ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு!

ஒசூர், ஜூன் 9 -

ஜெர்மன் நிறுவனமான ஃபெஸ்டோ, 500 கோடி ரூபாய் முதலீட்டில் ஒசூரில் புதிய தொழிற்சாலையை தொடங்கி உள்ளது.

ஜெர்மனியைத் தலைமையிடமாகக் கொண்ட ஆட்டோமேஷன் தொழில்நுட்பத்தில் உலகளாவிய முன்னணி நிறுவனமாக ஃபெஸ்டோ உள்ளது.

தமிழ்நாட்டின் ஒசூரில் 500 கோடி ரூபாய் முதலீட்டில் ஒரு அதிநவீன உற்பத்தி ஆலையை இந்நிறுவனம் தொடங்கி உள்ளது.

இந்த தொழிற்சாலை ஃபெஸ்டோவின் நூற்றாண்டு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக கருதப்படுகிறது.

சுமார் 75 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த ஆலை, உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளுக்கு மேம்பட்ட நியூமேடிக் ஆட்டோமேஷன் இயந்திரங்களை உற்பத்தி செய்யும்.

ஆரம்ப கட்டத்தில் ஆயிரம் பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகள் உருவாக்கும் என்றும்,

வரும் ஆண்டுகளில் செயல்பாடுகள் மற்றும் பணியாளர்களின் அளவை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.